திரு. கே. சகாதேவக் கண்டர்: பேரவைத் தலைவரவர்களே, நெடுஞ்சாலைப் பணித்துறையால் கான்டிராக்ட் கோரப்பட்டு, அதற்கான டேவணித் தொகை கட்டி, ஜல்லிகளைப் போட்டு ரோடு ஒரு மைல் நீளம் போட்ட பிறகு, ஆளும் கட்சிக்கு எதிராக வேலை செய்தார் என்று அந்த வேலையை ஒப்படைக்காமல் நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? கட்டப் பட்ட டேவணித்தொகை திருப்பிக் கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி திருப்பித் தரப்படவில்லையென்றால், அதைத் திருப்பித்தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: என்னிடத்தில் உள்ள விவரப்படி, திருவண்ணாமலை தானிப்பாடி சாலையில் ராதாபுரம் கிராமம் அருகில் தார் போடும் பணி மேற்கொள்ளப்படவில்லை என்று தலைமைப் பொறியாளர் கூறியிருக்கிறார். போதிய விவரம் எழுதிக்கொடுத்தால், தலைமைப் பொறியாளருக்கு அனுப்பி, தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

*Entry of non-Hindus in Temples*

* 98 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any rules have been framed by this Government to be observed when followers of other religions visit Hindu temples in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) & (இ) சட்ட மன்றப் பேரவையில் முதலமைச்சர் தெரிவித்த அறிக்கையை யொட்டி, இந்து சமய அறக்கட்டளைத் துறை ஆணையாளர், தமிழ் நாடு 1947-ஆம் ஆண்டு ஆலய நுழைவு அனுமதி விதிகளுக்கு வரைவுத் திருத்தங்களைப் பணிந்தனுப்பினர். அவை பரிசீலனையில் உள்ளன. திருத்தத்தின் நகல் ஒன்று நாளடைவில் பேரவைமுன் வைக்கப்படும்.

* * * * * *

Dr. H. V. HANDE: May I know from the Hon. Minister whether any steps have been taken by this Ministry to see that religious sentiments of worshippers of temples are not wounded or hurt in any manner? Whenever persons of other religions come inside Hindu temples they should respect the religious sentiments of worshippers. What steps have been taken by this Government to see that the religious sentiments are not hurt? May I know whether concrete steps in that direction have been taken recently during the last one or two months?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவரவர்களே, 5—1—1970 அன்று எச். ஆர். ஆக்ட் 3ஐ நீக்கிவிட்டபடியால், அது சம்பந்தமாக 8—4—1970 அன்று முதலமைச்சர் சட்டமன்றத்தில்

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

*1970 டிசம்பர் 2]*

பேசினுர்கள். வெளிமதத்தினர் கோவிலுக்குள் வந்தால் என்னென்ன விதிமுறைகள் கடைப் பிடிக்க வேண்டுமென்பதைப் பற்றி எல்லாம் ஒரு "டைரக்ஷன்" கொடுத்து இருக்கிறேம், அது சம்பந்தமாகக் கூட

Under sub-rules for Rule 4, the following shall be inserted :

4 (A) Persons who are not Hindus shall be admitted into the temple provided.

(1) They are admitted only during the time when puja is not performed?

(2) They are permitted to enter upto 'Mahamandapam' and not to the "Ardamandapam".

(3) They inform the temple authorities of the object of their visit and enter into the temples with temple guide or if there is no guide. with a servant of the temple.

(4) They abide by the custom and usage prevailing in the temple.

(5) They shall safeguard the general and special sanctity and honour of the temple.

(6) They do not take photographs of any part of the temple without the permission of the proper authority.

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தப் புதிய விதிகள் என்றிலிருந்து அமுலாக்கப்பட்டிருக்கின்றன? இதுபற்றிய ரூல்ஸ் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : 21—5—1970 இது சம்பந்தமான அமென்ட்மென்ட் செய்யப்பட்டிருக்கிறது. எப்படி விதி முறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்று விதிமுறைகள் கோவில் களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 8—4—1970 அன்று முதலமைச்சர் சட்டமன்றத்தில் கொடுத்த அறிக்கையை ஒட்டி இந்த விதிமுறைகள் அனுப்பப்பட்டு, அவை பின்பற்றப்பட்டு வருகிறது.

* * * *

## மீன் பிடித் தொழில் நவீனப்படுத்தப்படுதல்

*99. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) மீன் பிடித்தொழிலை நவீனமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் யாது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) சட்டப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.
@ 534-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.